**நகராட்சி அலுவலகம்,**
**சாத்தூர்.**
**நாள்: 23.09.2023**
**--------------------------------------**

# சாத்தூர் நகர்மன்றம் சாதாரணக் கூட்டம் அறிவிப்பு

**கூட்டம் எண். 19**

**நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2053ம் வருடம் புரட்டாசி 10 ஆம் நாள் 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27.09.2023ம் தேதியன்று புதன்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**நகர்மன்றத் தலைவர்**
**சாத்தூர் நகராட்சி.**

**பொருள் எண்.1**

சாத்தூர் நகராட்சியில் துப்புரவு பணி மேற்பார்வையாளராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்ற திரு.V.கருப்பசாமி மற்றும் 13 நபர்கள் (மொத்தம் 14 நபர்கள்) சேர்ந்து ஐந்தாவது மற்றும் ஆறாவது ஊதியக்குழு நிலுவைத் தொகைக்கான வட்டித்தொகை வழங்கப்படவில்லை என சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளனர். இதன்படி, சென்னை உயர்நீதிமன்றம், மதுரைக்கிளை கட்டளை நீதிப்பேராணை எண். WP (MD) No.16910/2020, நாள்: 18.07.2023ல் உத்திரவிட்டுள்ளார்கள்.

சாத்தூர் நகராட்சியில் 01.06.1988 முதல் 31.05.1989 வரை பணியாற்றிய பணியாளர்களுக்கு 5வது ஊதியக்குழு நிலுவைக்குரிய வட்டி தொகைகள் மற்றும் மேற்படி நகராட்சியில் 01.01.1996 முதல் 31.08.1988 வரை பணிபுரிந்த பணியாளர்களின் சேமநலநிதி கணக்கில் வரவாக்கப்பட்ட 60% நிலுவைத் தொகைக்குரிய 6வது ஊதியக்குழு நிலுவைத் தொகையை வழங்குவது குறித்து மேற்படி கட்டளை நீதிப்பேராணையின் மனுதாரர்களுக்கு 12 வர காலத்திற்குள் உரிய தொகை பெற்று வழங்கப்பட வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும் நான்காவது பிரதிவாரியான சாத்தூர் நகராட்சி ஆணையாளர் உரிய கணக்கீடு செய்ததை மூன்றாவது பிரதிவாதியான உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையின் உதவி இயக்குநர் கண்காணிப்பில் ஒவ்வொரு மனுதாரருக்கும் வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை சரிபார்த்து உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை, விருதுநகர் அவர்களின் கடிதம் ந.க.எண்.442/அ2/23, நாள். 12.09.2023ல் வரப்பெற்றுள்ளது. அதன்விபரம் கீழ்க்கண்ட விபரப்படி உள்ளது.

| வ. எண் | பணியாளர்கள் பெயர் மற்றும் பதவி | வழங்க வேண்டிய தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.V.கருப்பசாமி,<br>தூய்மைப்பணி மேற்பார்வையாளர் (ஓய்வு). | 37151 |
| 2 | திரு.K.பத்மநாபன், உதவியாளர். | 33119 |
| 3 | திருL.சேதுராமன், வருவாய் உதவியாளர். | 61119 |
| 4 | திரு.M.கந்தசாமி, வருவாய் உதவியாளர். | 73012 |
| 5 | திருமதி.A.விசாலாட்சி, மகப்பேறு உதவியாளர். | 28892 |
| 6 | திரு.S.பழனிச்சாமி, ஓட்டுநர். | 25676 |
| 7 | திரு.K.சந்திரன், ஓட்டுநர். | 34052 |
| 8 | திரு.G.வெள்ளையப்பன், தூய்மைப்பணியாளர். | 31200 |
| 9 | திரு.P.பெருமாள், தூய்மைப்பணியாளர். | 49955 |
| 10 | திரு.R.குணசேகரன், பதிவறை எழுத்தர். | 26937 |
| 11 | திரு.P.S.மணி (லேட்), அலுவலக உதவியாளர். | 38010 |
| 12 | திரு.P.ஜனகர், இளநிலை உதவியாளர். | 46472 |
| 13 | திரு.ராமர் (லேட்), பிட்டர். | 28103 |
| 14 | திரு.A.சண்முகவேலு, வருவாய் உதவியாளர். | 42717 |
| | **மொத்தம்** | **556415** |

எனவே வழக்கு தொடரப்பட்ட 14 நபர்களுக்கும் ஐந்தாவது மற்றும் ஆறாவது ஊதியக்குழு நிலுவைத் தொகைக்கான வட்டித்தொகை மொத்தம் ரூ.5,56,415/- பொது நிதியிலிருந்து வழங்கவும், மேற்படி செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை உத்திரவினை நிறைவேற்றும் பொருட்டு அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

   (ந.க.எண்:3615/2001/அ3)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.339, நாள்: 27.09.2023**

**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.9192/2022/SBM-1 நாள்: 21.08.2023 சாத்தூர் நகராட்சிக்கு 2023-2024-ம் ஆண்டிற்கு தூய்மை இந்தியா திட்டம் 2.0-ன் கீழ் கழிவுநீர் உறிஞ்சு வாகனம் ரூ.43.25 இலட்சம் மதிப்பீட்டில் வாங்க நிர்வாக அனுமதி அளித்து அதற்கு நிதி ஒதுக்கீடாக மத்திய அரசின் பங்கு தொகை ரூ.21.63 இலட்சமும், மாநில அரசின் பங்கு தொகையாக ரூ.14.27 இலட்சமும் நகராட்சியின் பங்கு தொகையாக ரூ.7.35 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட வாகனத்தினை வாங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

திட்ட பணியின் அவசர அவசியம் கருதி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்த்ப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 641/2023/ எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண்.340, நாள்: 27.09.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

சாத்தூர் நகராட்சிக்கு சொந்தமான கழிவுநீர் உந்து நிலையத்தில் புதியதாக கழிவுநீர் சுத்திகரிப்பு தொட்டி (STP TYPE -2) அமைக்கும் பணியினை மேற்கொள்ளுவதற்கு 03.08.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரபட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. எம்.ஞானசேகரன் - மதிப்பீட்டை விட 0.02% குறைவு /-
2. ஜி.மாரியப்பன் & கோ - மதிப்பீட்டை விட 3.87% அதிகம் /-

அலுவலக குறிப்பு:

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள எம்.ஞானசேகரன் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலைக்கு உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.215/2023/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண்.341, நாள்: 27.09.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

சாத்தூர் நகராட்சி வருவாய் பிரிவில் இயங்கி வந்த பிரிண்டர் பழுதடைந்து இயங்காத நிலையில் உள்ளது. சொத்து வரி, குடிநீர் கட்டண வரி, பாதாள சாக்கடை வரி, தொழில் வரி மற்றும் வரியில்லா இனங்களுக்கு வசூல் செய்யும் பணிக்கு கேட்பு அறிவிப்பு மற்றும் Hand Book எடுப்பதற்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே புதியதாக HP Laserjet A3 Printer ரூ.65,000/-க்கு வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

அலுவலக பணியின் அவசர அவசியம் கருதி மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்கவும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.657/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.342, நாள்: 27.09.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

சாத்தூர் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடைகளில் ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு 13.09.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.எம்.முத்துராமலிங்கம் - மதிப்பீட்டை விட 0.15 சதவீதம் குறைவு
2. திரு.பி.சுப்பாராஜ் - மதிப்பீட்டை விட 0.07 சதவீதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

அ) மேற்கண்ட பணியினை ரூ.8,00,000-க்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.325 நாள்:28.08.2023-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துராமலிங்கம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்

(ந.க.எண். 146 /2023/ எம்1 - பகுதி 2)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.343, நாள்: 27.09.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

சாத்தூர் நகராட்சி பகுதியில் அடிபம்பு மற்றும் விசைபம்புகளில் ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு 13.09.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.எம்.முத்துராமலிங்கம் - மதிப்பீட்டை விட 0.04 சதவீதம் குறைவு
2. திரு.பி.சுப்பாராஜ் - மதிப்பீட்டை விட 0.07 சதவீதம் அதிகம்

<u>அலுவலக குறிப்பு</u>:

அ) மேற்கண்ட பணியினை ரூ.6,00,000-க்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.324 நாள்:28.08.2023-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துராமலிங்கம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்

. (ந.க.எண்.147/2023/ எம்1 - பகுதி 2)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.344, நாள்: 27.09.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.7</u>**

சாத்தூர் நகராட்சி பகுதியில் தினசரி குடிநீர் விநியோகத்திற்கான குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பம்ப் மெயின் லையன்கள் உடைப்புகள் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு 13.09.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.எம்.முத்துராமலிங்கம் - மதிப்பீட்டை விட 0.05 சதவீதம் குறைவு
2. திரு.பி.சுப்பாராஜ் - மதிப்பீட்டை விட 0.14 சதவீதம் அதிகம்

<u>அலுவலக குறிப்பு</u>:

அ) மேற்கண்ட பணியினை ரூ.9,00,000-க்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.323 நாள்:28.08.2023-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துராமலிங்கம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்

(ந.க.எண்.148/2023/எம்1- பகுதி 2)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.345, நாள்: 27.09.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.8</u>**

சாத்தூர் நகராட்சி இருக்கண்குடி நீர் உந்து நிலையத்தில் உள்ளூர் குடிநீர் ஆதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு 8" ஆழ்துளை கிணறு புதியதாக அமைக்கும் பணியினை மேற்கொள்ளுவதற்கு 12.09.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.டி.சுந்தரமகாலிங்கம் - மதிப்பீட்டை விட 0.05 சதவீதம் குறைவு
2. திரு.எம்.ஞானசேகரன் - மதிப்பீட்டை விட 0.06 சதவீதம் அதிகம்

<u>அலுவலக குறிப்பு</u>:

அ) மேற்கண்ட பணியினை ரூ.4,00,000-க்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.303 நாள்:31.07.2023-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.டி.சுந்தரமகாலிங்கம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்

(ந.க.எண்.537/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.346, நாள்: 27.09.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதி அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.9</u>**

சாத்தூர் நகராட்சிக்கு இருக்கண்குடி நீர் உந்து நிலையம் கிணறு - II -ல் உள்ள மோட்டார் அவ்வப்போது பழுது ஏற்பட்டு இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே புதியதாக 120 மீட்டர் நீளத்திற்கு 16 Sq.mm Aluminium Cable வாங்கி பதிக்கும் பணியினை மேற்கொள்ளுவதற்கு 14.09.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.டி.சுந்தரமகாலிங்கம் - மதிப்பீட்டை விட 0.15 சதவீதம் குறைவு
2. திரு.எம்.ஞானசேகரன் - மதிப்பீட்டை விட 0.15 சதவீதம் அதிகம்

<u>அலுவலக குறிப்பு</u>:

அ) மேற்கண்ட பணியினை ரூ.1,05,000-க்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.326 நாள்:28.08.2023-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.டி.சுந்தரமகாலிங்கம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்

(ந.க.எண்.607/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.347, நாள்: 27.09.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதி அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.10</u>**

சாத்தூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினிகள், யூபிஸ்கள் மற்றும் பிரிண்டர்கள் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது 2023-2024-ம் ஆண்டிற்கு ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.75,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1782/2021/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.348, நாள்: 27.09.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.11</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.17404/2022/M1 நாள்:17.07.2023ன்படி, முதலமைச்சரின் காலை உணவு திட்டத்திற்காக பள்ளிகளுக்கு உணவு எடுத்து செல்லும் வாகனத்தில் இருப்பக்கங்கள் மற்றும் முன்பக்க முகப்பில் ஒட்டுவதற்காக திட்டம் குறித்த விழிப்புணர்வு படங்கள் மற்றும் வாசகங்களுடன் கூடிய பேனர்களை தயார் செய்து ஒட்டுவதற்கும் உணவு தயாரிக்கும் சமையல் கூடங்களின் முன் பக்க முகப்பில் பேனர் தயார் செய்து பிரேமுடன் ஒட்டுவதற்கும், பள்ளிகளில் உணவு பரிமாறும் இடங்களில் பேனர் தயார் செய்து பிரேமுடன் ஒட்டுவதற்கும் மாதிரிகள் மற்றும் பேனர்களின் அளவு குறித்த விவரங்களும் அனுப்பப்பட்டுள்ளது.

| S.No | Banner (ACP Material) | Size (Width X Height) |
|---|---|---|
| 1 | Left Side Photo – CMBFS<br>Menu (On Driver Stearing Side) | 6.5 ft width x 4.5 ft height |
| 2 | Right Side Photo – Chief Minister feeding to Children in dark blue background | 6.5 ft width x 4.5 ft height |
| 3 | Front Top Photo – CMBFS Logo in blue background | 4 ft width x 3 ft height |
| 4 | • 1 inch MS square frame 18 guage thickness with 2 coat paint yellow primer with black paint SR paste.<br>• Imported foam board 5mm thickness<br>• Avery media with Avery Glossy Lamination 12 pass HP latex print with clamp. | 5 ft width x $2^{1/2}$ ft height |

அதன்படி இந்நகராட்சி காலை உணவு திட்டத்திற்கு உணவு எடுத்து செல்லும் வாகனத்திற்கும், காலை உணவு தயாரிக்கும் உணவு கூடங்களில் ஒட்டுவதற்கும், பள்ளிகளில் உணவு பரிமாறும் இடங்களில் ஒட்டுவதற்கும் தேவையான பேனர்களை மேற்குறிப்பிட்டுள்ள மாதிரி படியும் அளவுகளின் படியும் தயார் செய்வதற்கும் இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.18000+GST18%க்கும் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:330/2023/M2)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.349, நாள்: 27.09.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.12</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.17404/2022/M1, நாள்:17.07.2023ன்படி முதலமைச்சரின் காலை உணவு திட்டத்திற்காக பள்ளிகளுக்கு உணவு எடுத்து செல்லும் வாகனத்தில் இருப்பக்கங்கள் மற்றும் முன்பக்க முகப்பில் ஒட்டுவதற்காக திட்டம் குறித்த விழிப்புணர்வு படங்கள் மற்றும் வாசகங்களுடன் கூடிய பேனர்களை தயார் செய்து ஒட்டுவதற்கும் உணவு தயாரிக்கும் சமையல் கூடங்களின் முன் பக்க முகப்பில் பேனர் தயார் செய்து பிரேமுடன் ஒட்டுவதற்கும், பள்ளிகளில் உணவு பரிமாறும் இடங்களில் பேனர் தயார் செய்து பிரேமுடன் ஒட்டுவதற்கும் மாதிரிகள் மற்றும் பேனர் தயார் செய்து சப்ளை செய்வதற்கு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளித் தொகை |
|---|---|---|
| 1 | அன்னை டிஜிட்டல் ப்ளக்ஸ் பிரிண்டிங் | ரூ.21850 + GST 18% |
| 2 | மயில் ஆர்ட்ஸ் டிஜிட்டல் ப்ளக்ஸ் பிரிண்டிங் | ரூ.19650 + GST 18% |
| 3 | அஸ்ட்ரோ டிஜிட்டல் ப்ளக்ஸ் பிரிண்டிங் | ரூ.18000 + GST 18% |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலில் அஸ்ட்ரோ டிஜிட்டல் ப்ளக்ஸ் பிரிண்டிங் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. முதலமைச்சரின் காலை உணவு திட்டம் 25.05.2023 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்க இருப்பதால் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள அஸ்ட்ரோ டிஜிட்டல் ப்ளக்ஸ் பிரிண்டிங் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று விநியோக உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.330/2023/M2)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.350, நாள்: 27.09.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வணிக வளாக கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதனை இடித்து அப்புறப்படுத்துவதற்கு கட்டிடத்தின் உறுதி தன்மை தரச்சான்றினை (Stablity Certificate) அரசு பொறியியல் கல்லூரி திருநெல்வேலி அவர்களிடமிருந்து ஆய்வு செய்து பெறுவதற்கான கட்டணம் ரூ.23,600/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 645/2022/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.351, நாள்: 27.09.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட பெருமாள் கோவில் தெற்கு ரத வீதியில் உள்ள பழைய நகர்மன்ற கூட்ட அரங்கு மிகவும் மோசமான நிலையில் உள்ளதனை இடித்து அப்புறப்படுத்துவதற்கு கட்டிடத்தின் உறுதி தன்மை தரச்சான்றினை (Stablity Certificate) அரசு பொறியியல் கல்லூரி திருநெல்வேலி அவர்களிடமிருந்து ஆய்வு செய்து பெறுவதற்கான கட்டணம் ரூ.11,800/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 645/2022/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.352, நாள்: 27.09.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட பெருமாள் கோவில் எதிர்புறம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பழைய ஆணையாளர் குடியிருப்பு மிகவும் மோசமான நிலையில் உள்ளதனை இடித்து அப்புறப்படுத்துவதற்கு கட்டிடத்தின் உறுதி தன்மை தரச்சான்றினை (Stablity Certificate) அரசு பொறியியல் கல்லூரி திருநெல்வேலி அவர்களிடமிருந்து ஆய்வு செய்து பெறுவதற்கான கட்டணம் ரூ.23,600/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 645/2022/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.353, நாள்: 27.09.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) ச.குருசாமி,**
**நகர்மன்றத் தலைவர்,**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**